

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர், சட்டநாதன்

எஸ், ஜெ[illegible]

அவர்களுக்கு

அன்புடன்

[illegible]

11.04.05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். நளீம்

கடைசிச் சொட்டு உசிரில்

யாத்ரா

நண்பர் இலக்கியக் குழு
வாழைச்சேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kadaisich Choddu Ushiril

(Collection of Tamil Poems)

by : S. Naleem

© : Author

Rica Mill Road,
Meeravodai 05,
Valaichenai,
Sri Lanka.

First Edition : October 2000
Publisher : Yathra
Printed : Uni Arts

Typeset : Yoga
ISBN : 955-8448-00-1
Cover Photograph : Rio Studio

கடைசிச் சொட்டு உசிரில்

(கவிதைகள்)

எஸ்.நளீம்

உரிமை – ஆசிரியர்

முதற்பதிப்பு : ஒக்டோபர் 2000
வெளியீடு – யாத்ரா.
விலை – 95/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழூட்டிய ஆசான்

ஏ. எல். மீராசாஹிப்

(அதிபர்)

நினைவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன், சரிநிகர்,
தினமுரசு, மீள்பார்வை,
தினக்கதிர், இலக்கு,
ஈஸ்டன் டைம்ஸ்,
மற்றும்
இலங்கை வானொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீப்பந்தமாகும் பேனாவும் தூரிகையும்!

கவிதைகளின் பூமியான கிழக்கு மற்றொரு கவிஞனை உங்கள் முன் கொண்டு வருகிறது. யுத்தத்தால் சேதாரப்பட்டு நொந்துபோய்க் கிடந்தாலும் கவிதை காணாமல் போகவில்லை என்பதை உரத்து சொல்லியபடி இன்னுமொரு இளங்கவிஞன் இங்கே எழுந்து நிற்கிறான்.

பேனாவை மட்டுமல்ல தூரிகையையும் கூட ஒரு தீப்பந்தமாக ஏந்தும் எஸ்.நளீம், மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடாத் தொகுதியில் உள்ள பிரதான முஸ்லிம் கிராமங்களுள் ஒன்றான மீராவோடையில் அகமது லெவ்வை சம்சுதீன் – யாசின்பாவா பாத்திமா பீபி ஆகியோரின் இளைய புதல்வராகப் பிறந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீராவோடை அல்ஹிதாயா ம.வி., வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை, கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ஆகியவற்றின் மாணவரான இவர் கற்கும் காலத்திலேயே கவனம் பெற்றவர். 'ஒடை' என்ற சஞ்சிகையையும் 'இலக்கு' என்ற கவியேட்டையும் நடாத்தி வந்தார். வானொலி, மற்றும் மேடைக் கவியரங்குகளிலும் சோபிப்பவர்.

இலங்கையின் இந்த நூற்றாண்டின் முதல் தமிழ்க் கவிதை இதழான 'யாத்ரா' வின் உதவி ஆசிரியர்களுள் ஒருவரா்கவும் செயற்பட்டு வருகிறார். சஞ்சிகை முழுவதிலும் நளீமின் ஓவிய வல்லமையை உங்களால் தரிசிக்க முடியும்.

ஆயுதந் தரித்தோரால் அடிக்கடி அச்சுறுத்தப்படும் ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்த ஒரு இளங் கவிஞனின் சிந்தனை ஓட்டத்தையும், எண்ண அலைகளையும் இத்தொகுதியில் நமக்குக் காணக் கிடைக்கிறது.

எமது பிரதேசத்தின் பெருமை சொல்லும் வகையில் எதிர்காலத்தை வசப்படுத்திக் கொள்ளப் போகும் மற்றொரு கலைஞனை நாம் பெற்றிருக்கிறோம் என்பதில் ஏன் நாங்கள் மகிழ்ச்சியடையக் கூடாது?

– யாத்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலடாகிவிட்ட மரபும் வரவுக் கவிதையும்

உலகின் வேறெந்த மொழிகளுக்கும் அமையாத சிறப்பில், தமிழ்க் கவிதை இலக்கியத்துக்கு, முற்று முழுதான ஓர் இலக்கணம் உண்டு என்று துணியுமளவுக்குத் தமிழ்க் கவிதை இலக்கியமும் இலக்கணமும் உச்சத்தில் இருக்கின்றன எனலாம்.

விரல் சொடுக்கும் அல்லது கண் சிமிட்டும் நேரத்தைக்கூட நான்காகப் பிரித்து ஒழுங்கு செய்திருக்கும் புலமையே இதற்குத் தக்க உதாரணமாகும்.

இதனால், கவிதைப் பண்புகளையோ விதி முறைகளையோ வேறெந்த மொழி ஊடகமும் தமிழ்க் கவிதை உலகுக்குப் போதிக்க வேண்டிய நிலையில் நாம் இல்லை.

எனினும் நமது பண்டிதர்களில் சிலர், பிற மொழி ஊடகம் ஒன்று, அதிலும் பூரணப்படாத ஒன்று, தமிக்கு அறிமுகப்படுத்தப்பட்ட கையோடு, 'இதுதான் கவிதை, இப்படித்தான் கவிதை அமைதல் வேண்டும்', என்றெல்லாம் முழங்கியும் போதித்தும் வந்ததோடு, வருவதோடு, நமது தமிழ்க் கவிதைகளையும் பண்புகளையும் விதி முறைகளையும் எள்ளிப் புறமொதுக்கும் கூத்தும் தொடரத்தான் செய்கிறது.

Modern Verse எனப்படும் மேல் நாட்டுக் கவிதைசார் ஊடகத்தைக் கருத்துப்படியாக அல்லாமல் சொற்படியாக மொழி பெயர்த்துப் 'புதுக்கவிதை' என நமக்கு அறிமுகம் செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை, நாவலைப் போன்று இந்த ஊடகமும் தமிழுக்குப் புதிய வரவினதாகும். இலக்கியத்துக்குரிய ஓர் ஆரோக்கியமான வரவுதான் என்பதில் ஐயமில்லை. இது தமிழில் கோலோச்ச ஆவன செய்தவர்களுக்கு இலக்கிய உலகம் என்றென்றும் கடப்பாடுடையது.

'புதுக்கவிதை' என்ற பெயர் தற்காலிகமானதென்றும் சரியான அர்த்தப்பாடுடையது அல்லவென்றும் அன்றிலிருந்து இன்றுவரை தமிழகத்துக் கவிஞர்கள் சிலர் கூறிக் கொண்டிருக்கிறார்களே தவிர, அதற்குரிய சரியான ஒரு பெயரைச் சூடுவதாகத் தெரியவில்லை. நானுந்தான்.

இந்த ஊடகம் கவிதை சார் ஊடகம் ஒன்றே தவிர, தமிழ்க் கவிதையோடு ஒப்பிடும் போது – சில வேளை இவ்வூடகம் தோன்றிய அவ்வம் மொழிகளின் மரபு வழிக் கவிதையோடு ஒப்பிடும்போதுகூட முற்று முழுதாக கவிதை ஊடகம் என்று ஏற்றுக் கொள்ளத் தயக்கமாகவே இருக்கின்றது.

கவிதைக்குரிய சொற்கள் மிகவும் நேர்த்தியானவை. சாதாரணமாக நாம் நாளாந்தம் வழக்கில் ஆளும் சொற்களைவிடக் கவிதைக்குரிய சொற்கள் இலக்கியத் தரம் வாய்ந்தவையாகவே இருக்கும். இப்படிப்பட்ட தேர்ந்த சொற்களைத்தான் தமிழில் 'சீர்' என்கிறோம். உரை நடைக்குரிய சொல்லைச் 'சொல்' அல்லது 'வசனம்' என்றுதான் சொல்லுகிறோம்.

'புதுக்கவிதை' எனப்படும் இந்த ஊடகம், சீர்களாலும் வசனங்களாலும் ஆன ஓர் ஊடகமே. அதாவது கவிதைக்கும் வசனத்துக்கும் இடைப்பட்ட ஓர் ஊடகமாகும். இது முற்று முழுதான கவிதையும் அல்ல; உரை நடையும் அல்ல. அதனால்தான் இது கவிதைசார் ஊடகம் எனப்படுகிறது.

பொது மக்களிடம் மிக எளிதில் சென்றடையக்கூடிய ஒன்றாகவும் இருக்கிறது. ஆகவேதான், புதுக்கவிதை என்ற பதப் பிரயோகம் சரியானதல்ல என்று கூற வேண்டிஇருக்கிறது. 'புதுக் கவிதை' என்ற பதப் பிரயோகத்தைவிடப் 'புகுந்த கவிதை' என்ற பிரயோகம் பொருத்தமாகத் தோன்றுகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கவிதை, நவ கவிதை, யாப்பிலிக் கவிதை, சுதந்திரக் கவிதை, மணிக் கவிதை, வசன கவிதை, கவிதா வசனம், உரை வீச்சு, துணுக்குக் கவிதை என்று அவ்வப்போது கூறப்பட்டாலும் எந்தப் பெயரும் இது வரை நிலை நிற்கத் தக்கதாகப் பொருந்தி வரவில்லை.

ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனத் தமிழ்க் கவிதைகள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுள்ளன.

ஆங்கிலத்தில் பிரசித்தி பெற்ற 'லிமரிக்ஸ்' என்ற வடிவத்தை எமது கவிஞர் அமரர் மகாகவி அவர்கள் 'குறும்பா' எனத் தமிழில் அறிமுகப் படுத்தினார்.

அதைப்போல், இந்தக் கவிதை சார் ஊடகத்திற்கும் 'படிமப்பா' என்றோ 'குறியீட்டுப்பா' என்றோ 'படிம - குறியீட்டுப்பா' என்றோ 'சொற்சீர்ப்பா' என்றோ பெயர் வைத்திருந்தால், யாப்புக் கவிஞர்களின் எதிர்ப்போ போராட்டமோ தோன்றியே இராது! மாறாக அவர்களும் பங்களிப்புச் செய்திருப்பார்கள்!

தமிழ்க் கவிதையைப் போன்றில்லாமல், உச்சகட்டச் சிறப்பில் குறைபாடுடைய இந்த ஊடகத்தை பரப்பவும் வளர்த்தெடுக்கவும் வேண்டிய கடப்பாட்டில் இருந்த தமிழகத்துக் கவிஞர்கள், பல பிழையான உத்திகளைக் கையாண்டமை வரலாறாக உள்ளது.

பண்டிதர்களிடமிருந்து கவிதையைப் பறித்து விட்டோம் என்றார்கள்.

இலக்கணச் சிறையை உடைத்து விட்டோம் என்றார்கள்.

கவிதை மக்களுக்குச் செல்ல வேண்டுமானால் அது எளிமையாக இருத்தல் வேண்டும் என்றார்கள். 'என்றார்கள்' என்பதைவிட 'வற்புறுத்தினார்கள்' என்பதே சரி.

இந்த ஊடகத்தின் குறைபாட்டை மறைக்குமுகமாகச் சில கவிஞர்கள், தமிழ்க் கவிதைகளுக்குரிய எதுகை – மோனை அணிகளைப் போட்டு அலங்கரிக்கவும் அதே நேரம் குழப்பவும் தொடங்கினார்கள் – ஏதோ புதிதாகக் கவிதை இலக்கியத்தைத் தமிழ் கண்டிருப்பதைப்போல!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஊடகம் போன்றதொரு ஊடகம், தமிழ்க் கவிதை இலக்கியத்தின் முன்னையதோர் பரிணாம தசையில் இருந்திருக்கத்தான் வேண்டும் என்பதை எவரும் மறுக்க முடியுமா?

இன்னும் சில தசாப்தங்களின் பின்போ நூற்றாண்டுகளின் பின்போ, இதே ஊடகம், தமிழ்க் கவிதை கண்டிருக்கும் இன்றுள்ள உச்ச நிலைமைக்குத்தான் வரும் என்பதையும் எவரும் மறுக்க முடியுமா?

இங்கே நான் வலியுறுத்த முனைவது, மிக அருமையான மேல் நாட்டு ஊடகம் ஒன்றை வளர்த்தெடுப்பதில் நம் கவிஞர்கள் பிழையாக அணுகு முறைகள் சிலவற்றையும் கையாண்டுவிட்டார்கள் என்பதைத்தான்.

கருத்துப் பொருத்தமான பெயர் வைக்கத் தவறியமை, உயர் நிலையின் தமிழ்க் கவிதையைத் தாழ் நிலையினதெனக் கொச்சைப் படுத்தியமை, தமிழ் இலக்கியத்தின் ஒரே அடிநாதமாக பண்டுதொட்டே திகழ்ந்து வரும் தமிழ்க் கவிதையைப் புறக்கணித்ததோடு இழிவும் படுத்தியமை, தமிழ்க் கவிதைப் பரப்பு கடந்து வந்திருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கக்கூடிய ஒரு நிலைக்குப் பின் சென்றமை, சிறுகதை, நாவல், புதுக்கவிதை என்று மேல்நாட்டாரின் வருகைக்குப் பிறகுதான் தமிழில் இலக்கியமே தோன்றியிருக்கிறது என்ற மாயை பொதுப்படையாக ஏற்படக் காரணமாக இருந்தமை, பிற நாட்டார் வகுத்தளிக்கும் இஸங்களுக்கு அடிமையாகித் தமிழ்க் கவிதையையோ இலக்கியத்தையோ விளங்கிக் கொள்ள இந்த இஸங்கள் அவசியம் என்று முழங்குகின்றமை என்று அவ்வணுகு முறைகளை நாம் வகைப்படுத்த முடியும்.

மரபுக் கவிதை என்ற பிரயோகம்கூடப் பிழையானதுதானோ என்றும் தோன்றுகிறது. இன்னும் சிறிது காலம் கடந்த நிலையில். இந்தப் புதுக்கவிதையைக்கூட மரபுக் கவிதை என்று சொல்லவேண்டிவரலாம்!

எனவே, யாப்புக் கவிதை என்ற பிரயோகமே சரியானதெனக் கருதுகிறேன்.

புதுக்கவிதைக் காரர்கள் யாப்புக் கவிதை மீது அக்காலத்திலிருந்து சுமத்தி வரும் அபாண்டங்கள் சந்தர்ப்பவாதமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர உண்மையானவை அல்ல என்பதையும் கவிஞர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிறந்த தமிழ்ப் புலமை உள்ளவர்களாலேயே யாப்புக் கவிதை இயற்றவும் முடியும்; அவற்றை விளங்கிக் கொள்ளவும் முடியும்.

ஐரோப்பியரின் வருகைக்குப் பிறகு தமிழின் நிலை என்னவாக இருந்தது என்பதை வரலாறு நமக்குச் சொல்கிறது. இக்காலகட்டத்தில் தமிழ்க் கவிதை இலக்கியத்தில் ஏற்பட்ட சரிவோடு தமிழை ஆழமாகக் கற்பவர்களும் அருகிப் போக, கற்ற சிலரிடம் மட்டுமே தமிழ் தங்கலாயிற்று.

இப்பண்டிதர்கள் கவிஞர்கள் அல்லர்! இலக்கணம் மட்டுமே தெரிந்திருந்த தமிழ் அறிஞர்கள். கவிதை இலக்கணம் தெரிந்திருந்த அவர்கள், இருந்திருந்து வறட்டுத்தனமாகச் சிற்சிலவற்றைக் கிறுக்கிய உண்மைக்காக யாப்புக் கவிதை பண்டிதர்கள் வசம் என்பதுவும், யாப்புக் கவிதை தேவையற்ற ஒன்றாகிவிட்டது என்பதுவும் அறிவு பூர்வமானதல்லவே!

யாப்புக் கவிதைக்கு நிறைந்த தமிழ்ப் புலமை தேவை, ஆனால் புதுக் கவிதைக்கு அடிப்படைத் தமிழறிவு இருந்தாலே போதும் என்று கூறப்பட்டு வந்திருந்தால் அதை அனைவருமே பெருந்தன்மையோடு ஏற்றிருப்பார்கள்.

இது நாம் அறிந்த வரலாறு.

எப்படியாகிலும் இந்தச் சொற்சீர்க் கவிதை வடிவம் தமிழில் வேரூன்றிவிட்டது.

தமிழ்க் கவிதை இலக்கியத்திலிருந்து படிமப் பாவை ஒதுக்கிவிட முடியாத வரலாறு இணைந்துவிட்டது.

படிமம், குறியீடு இருந்தால்தான் அது புதுக் கவிதை என்ற கோட்பாடும் மீறப்பட்டு விட்டது.

ஓரளவு கற்றறிந்தவர்களுக்கே படிமம், குறியீடுகள் விளங்கக் கூடியவை என்றும் பொது மக்களுக்குக் கவிதை போக வேண்டுமானால் அது நேரடியாகக் கூறப்படுதல் வேண்டும் என்றும் ஒரு தெளிவு அல்லது கொள்கை ஏற்பட்டதன் பின்பு, அதன் பிரதிபலனாக, இயல்பு நவிற்சிக் கவிதைகள் தோன்றலாகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமமோ குறியீடோ இல்லாத இந்த வகை இயல்பு நவிற்சிக்கவிதைகளை, வசன கவிதை என்றும் கவிதா வசனம் என்றும் சொல்லவும் தொடங்கினார்கள்.

ஒரு வகையில் பார்க்கப் போனால்., இயல்பு நவிற்சிதான் தமிழ்க் கவிதை மரபு எனலாம்.

பண்டிதர்களிடம் மரபுக் கவிதை சிக்கிவிட்டது என்று யாப்புக் கவிதை பற்றி அன்று கூறப்பட்டது.

புதுக்கவிதையைப் பண்டிதர்களிடமிருந்து மீட்க வேண்டும் என்றொரு போராட்டம் கவிதையுலகில் ஏற்படப் போகிறதோ என்று கூறுமளவுக்கு இன்று பண்டிதர்கள் புதுக் கவிதைக்கு அது வேண்டும் இது வேண்டும் என்றும், இக்கவிதையில் படிமம் இல்லை, குறியீடில்லை என்றும் கூறத் தொடங்கியிருக்கிறார்கள்.

மறுபடியும் கவிதையின் இறுக்கப்பாடு வலியுறுத்தப்படுகிறது!

எவர் எதைச் சொன்னபோதிலும், எந்த இலக்கிய ஊடகத்துக்கும் எவரும் எக்காலத்திலும் இதுதான் ஒரே விதிமுறை என்று இலக்கணம் வகுத்துவிடமுடியாது என்பதையும் உள்ளத்தில் இருத்துதல் முக்கியமாகும்.

தமிழில் காணப்படும் யாப்பிலக்கணம்கூட, ஒரு பொது நோக்கிற்காகவும் வசதிக்காகவும் கட்டுக்கோப்பிற்காகவும் வகுக்கப்பட்ட அதி உன்னத இலக்கணமே தவிர, இதுதான் கவிதைக்குரிய ஒரே இலக்கணம் என்று உலகில் தமிழ் வாழும் வரை கூறப்படக்கூடியதா என்பது நினைவிற் கொள்ளத்தக்கதே.

இந்தக் கவிதைப் புரட்சி தெரிந்தோ தெரியாமலோ, புதிய வடிவத்தின் கவிஞராகச் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு, கவிஞர் பட்டியலில் பெயர் பதிந்து கொண்ட ஓர் இளைஞராக மிளிர்கிறார் எஸ். நளீம்.

புதுவரவுக் கவிதையைச் சிந்தாமல் சிதறாமல் அழகாகத் தரும் ஒரு கவிஞர் இளைஞர்கள் மத்தயில் இருக்கிறார் என்பது எல்லாருக்கும் ஓர் இனிப்பான செய்திதானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது சில கவிதைகள் படிமம் - குறியீடுகளுடன் காணப்பட்டாலும், பெரும்பான்மைக் கவிதைகள் இயல்பு நவிற்சியாகவே இடம் பெறுகின்றன.

அவை ஆழமாகவும் கவித்துவம் நிறைந்ததாகவும் பல இடங்களில் பிரகாசிக்கவும் செய்கின்றன.

நவீன ஓவியத்தில் ஈடுபாடும் திறமையும் மிக்க நளீமின் நவீன கவிதைகளும் அழகிய ஓவியங்களாகவே காட்சியளிப்பதன் காரணம், இவரது கவிதைகளில் மேலோங்கி நிற்கும் யதார்த்தமாகத்தான் இருக்க வேண்டும்.

சமாதானக் காலத்தில் பிறந்து சமாதானக் காலத்திலேயோ சண்டைக் காலத்திலேயோ கவிஞராகி இன்றைய போர்க் காலத்துக் கவிதைகள் பாடும் கவிஞர்களுக்கும், விபரம் தெரிந்த காலம் முதல் போர்க்கிடையிலேயே வளர்ந்து போர்க் காலாலத்துப் பிரச்சினைகளாலேயே கவிதை வடிக்கும் நளீமுக்கும் நுண்ணிய சில வேறுபாடுகளைக் காண முடிகிறது.

இலங்கையில் இருந்துகொண்டு பலஸ்தீனத்தைப் பாடும் கவிஞனின் கவிதா வரட்சிக்கும். யுத்தத்தின் மத்தியிலேயே இருந்து கொண்டு யுத்தக் கவிதை பாடும் நளீமின் கவிதைச் செழுமைக்கும் இடையில் அந்த வேறுபாடு தொக்கி நிற்கிறது.

இவரது ஐந்து காதல் கவிதைகளும் ஏனைய சில பொதுக் கவிதைகளும் நூலின் பெரும்பான்மைக் கவிதைகளிலிருந்து முற்று முழுதாக வேறுபடுகின்றன. இவை இவரது ஆரம்பக் காலத்திய கவிதைகள் என எண்ணுகின்றேன்.

இலக்கியத்துக்கேயுரிய, அதிலும் கவிதைக்கேயுரிய அதீதப்பண்பு சில கவிதைகளில் விரவிக் கிடக்கிறது.

இப்பண்பைக் கற்பனை என்று ஒரேயடியாக விலக்கிவிடவும் முடியாது. இன்றைய யதார்த்த நிலைப்பட்ட போர்க் காலத்துக் கவிதைகள் சில, சிலரால் இவ்வாறு அதீத பண்புக்குட்படுத்தப்பட்டு எழுதப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை கற்பனைகள் என்பதை விட, யதார்த்தத்தை மேலும் வலியுறுத்த மேற்கொள்ளப்பட்ட ஓர் உத்தி என்பதுதான் சரியாகும்.

'மொடனார்ட் சிரிப்பும் புதுக் கவிதைப் பார்வையும்', 'உன் மனசுக்குள் இருக்கிறேனா?', 'கவியழகி', 'அழகின் ஒட்டுமொத்தம்' ஆகிய நான்கு காதல் கவிதைகளும் படிமம் – குறியீடுகளுடன் புனையப்பட்ட ஓவியப் பண்புக் கவிதைகளாக மனதில் தைக்கின்றன.

'தாமதமாக வந்த விண்ணப்பத்திற்கு' என்ற கவிதை, வித்தியாசமாக முடிக்கப்பட்டிருப்பது, என் முதற் கவிதையை ஞாபகமூட்டிச் செல்கிறது!

'கொழும்பில் இருக்கும் மச்சானுக்கு' என்ற கவிதை, காதலை மீறிய ஒரு பாசத்தை வெளிப்படுத்தும் காதலியின் கவிதையாகவும், 'தங்கைக்கோர் கவிதை', ஒரு சகோதரனின் பாசக்கவிதையாகவும் வேறுபட்டு நிற்கின்றன.

'வண்ணத்துப் பூ(ச்சி)', 'தாவணி', 'நான் சிகரெட்' என்ற கவிதைகள், துணுக்குப் பாணியில் எழுதப்பட்டிருக்கின்றன.

'மனிதனுக்கு ஆறறிவு, காக்கைக்கு ஏழறிவு' என்றும்,

'. . . .மிருகங்களில் உறவு சொல்லி அழைப்பது மாடு மட்டுந்தான்; பறவைகளில் . . . .காகம் மட்டுந்தான் . . .'

என்றும் வளரும் 'அநீதி'க்கவிதை, காகத்தைப் பற்றிச் சிலாகித்து,

'.... என்றாலும் அதன் துரதிர்ஷ்டம்
இங்கே காக்கையைத் துரத்திப்
புறாக்களுக்குத் தீனி போடும் கைகள்!' என முடிவடைகிறது.

'புறாக்கள்' என்ற இடத்தில் 'கழுகு' என்றிருந்திருந்தால். 'அநீதி' என்ற தலைப்புக்குப் பொருத்தமாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

'குரைக்க ஒரு நாய் வேண்டும்' என்ற கவிதை ஜனநாயகத்தை மிகக் குரூரமாகக் கிண்டல் செய்கிறது. கவிஞரின்நகைச் சுவை, இதுபோல் பல கவிதைகளில் பளிச்சிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினத்துக்குரிய ஒரு நிகழ்ச்சியோ கருத்தோ தொடர்ந்தும் இடம் பெறுமாகில் ஆத்திரம் உண்டாகும். மேன்மேலும் அதுவே நடைபெறுகையில் வெறுப்பும் பிறகு விரக்தியும் உண்டாகி, அதன் பிறகும் அது தொடருமாகில், நம்மால் எதுவும் செய்யக்கூடவில்லையே என்ற ஏக்கத்தாலோ யாரும் இதைச் சட்டை செய்கிறார்களில்லையே என்ற ஆதங்கத்தாலோ நையாண்டியும் கிண்டலும் மனத்தில் பிறக்கின்றன. இதனை நகைச் சுவையாக்கி வெளிப்படுத்த அதி உயர்ந்த திறமை சித்திக்கப் பெறுதல் வேண்டும்.

இந்த ஓவியக்கலைஞர், கவிஞரிடம் இத்திறமை நன்றாகவே வெற்றி நடை போடுகிறது.

'புனிதமானதெனக் கருதப்படும் ஒரு மதமும் அதன் சின்னமான ஒரு மரமும்கூட, சிறுபான்மையினருள் கணிசமானோரையும், பெரும்பான்மையினருள்ளும், சிறிய அளவில்தான் என்றாலும் குறிப்பிடத்தக்க சிலரையும் விரக்தியில் ஆழ்த்தியிருக்கின்றன என்றால், அது அந்த மதத்தினதோ மரத்தினதோ தவறு அல்ல, சில ஆதிக்க வெறியர்களின் போக்குத்தான்!' என்ற துணிபை 'ஆதிக்கம்' என்ற கவிதை புலப்படுத்துகின்றது.

'கனவு தந்த கவிதை! இளைஞர்களின் பரிதாபகரமான நிலையைத் தொட்டுச் செல்கிறது.

விரக்தி, 04.02.1999, கஷ்டமானகவிதை ஒன்று, இரண்டு மனசின் லாவாக்கள், வக்கிரத்தின் உக்கிரத்தில், சுதந்திரம், இன்னும் எழுதாக அந்தக் கவிதை, மூன்றாமவனின் புலம்பல், காற்றில் எல்லாம் எமனின் காலடிகள், விரிசலின் விசாலம், உறவுக் கவிதை, ஒட்டடை தட்ட ஒரு கவிதை, போர் முனையில் ஒரு சமாதானக் கனா, ஊசலாடும் பிரேதம் ஆகிய பதினைந்து கவிதைகளும் இவரைப் போரிடைக் கவிஞராகப் பறைசாற்றுகின்றன.

ஓர் ஊர் அல்லது ஒரு சமுதாயம் உள்ளாகியிருக்கும் நிலை, விருப்பு வெறுப்புக்கள், நன்மை தீமைகள், எதிர்பார்ப்புக்கள், கையாலாகாத நிலை, கோபம், விரக்தி போன்ற பலப்பல உணர்வுகளைத் தன்னகத்தே கொண்டு குமுறும் ஒரு கவிஞரின் ஒட்டுமொத்த நிலையாக இக் கவிதைகள் அமைந்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நீண்ட கவிதையைப் பதினைந்து தலைப்புக்களில் பிரித்திருக்கிறார் என்றுகூடச் சொல்லலாம். சமாதானத்துக்காக இவர் கூறும் சில கருத்துக்கள் சிலாகிக்கத் தக்கவை. 'சுடுங்கள், வெட்டுங்கள், குத்துங்கள், கொல்லுங்கள், எரியுங்கள்; மனிதன் அகதியென்றேனும் ஒன்று படட்டும்' என்ற விரக்தியும், 'இன்று தேசிய தினம், எங்கும் போகாதே, குண்டு வெடிக்கும்!' என்ற யதார்த்த நிலையும்,

'இனிக்கவிதை எழுத ஒரு எறிகணையின் சக்தியேனும் பேனாவுக்கு வேண்டும்,' என்ற ஆத்திரத் துடிப்பும்., 'கூப்பிடு தூரத்தில் அவர்கள், இடையில் காவலரணை மட்டும் நம்பி எப்படிக் கவிதை எழுதுவது?' என்ற கையாலாகாத் தன்மையும், 'நீ வேறு நான் வேறு என்றாகியதற்கு நியும் நானும் மட்டுமல்ல, உன்னையும் என்னையும் பிரிக்கும் பங்கர்களுக்கும் ஆயுதங்களுக்கும் பங்கிருக்கிறது,' என்ற ஏக்கமும், 'குரைக்க ஒரு நாய் வேண்டும், எங்கள் நாய்களால் குரைக்க முடியவில்லை, கடிக்கவும் முடியவில்லை' என்ற கிண்டலும், 'அங்கமெலாம் செத்துக் கடைசிச் சொட்டு உசிரில் குறுகுறுத்தது இதயம்....' என்ற யதார்த்தமும்,

ஒரு முதிய கவிஞனிடமிருந்து எதிர்பார்க்கக்கூடியவை அல்லவா! ஆனாலும் இந்த இளைஞர், அனுபவத்தை மட்டுமே கவிதையில் கொண்டு வருபவராக இருப்பதால், ஒரு முதிய கவிஞனின் பரிணாமப் படி ஒன்றைப் பிடித்திருக்கிறார்! இவர் இன்னுமின்னும் பரிணாமப்படுகையில், தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு தலை சிறந்த கவிஞரைக் காண முடியும்என்ற நம்பிக்கை எனக்குண்டு. கடைசிச் சொட்டு உசிரிலும் இந்தக் கவிஞர் கவிஞராக மட்டுமின்றி, இலக்கியவானாகவும் ஓவியவானாகவும் கலைஞனாகவும் மிளிர எல்லாம் வல்ல இறைவன் வழி சமைக்கட்டும் என்று பிராத்திக்கிறேன்.

அன்பு,

அல் அஸூமத்,

1/1, சென் மேரிஸ் றோட்,

மஹபாகே, றாகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தங்களான சோகங்களும் காயங்களும்

கவிதையின் பிறப்புத்தளம் அல்லது கவிதையை வெளிப்படுத்துகின்ற கவிஞனின் உணர்வு நிலையைக் கொண்டு பகுத்துப்பார்த்தால் மூன்று நிலைகளில் கவிதை தோற்றம் பெறுகிறது. அதாவது போராட்டம், உழைப்பு, அழுகை இவை மூன்றில் போராட்டத்தின் வெளிப்பாடு இரத்தம், உழைப்பின் வெளிப்பாடு வியர்வை, அழுகையின் வெளிப்பாடு கண்ணீர் என அமையும். இவற்றுள் மூன்றாவது ரகமே எனது கவிதைகள்.

அல்லாமா இக்பால் அவர்களின் அறிவுச் செழுமையோ, மகாகவி பாரதியின் வீரமோ, கலீல் ஜிப்ரானின் உச்ச சிந்தனையோ, அல்லது மஹ்மூத் தர்வீஷின் புரட்சி வாக்கியங்களோ இதில் இல்லை. எனது, என்னவரது, என்தேசத்தவரது, என் உணர்வுகளை ஒத்த உலகத்தவரது மனப் புழுங்கலை சொல்லியழும் ஒப்பாரிகள். இவைகளை கவிதைகள் என்பதைவிட கண்ணீர் கலந்த முறையீடுகள் என்பதே மிகச்சரி என்பேன். ஆயுதப் போராளிகளான கவிதைகளுக்குள் என்னவைகள் உண்ணாவிரதப் போராளிகள் இங்கே எம்மிடம் என்ன பலமிருக்கிறது அழுவதைத்தவிர. சொல்லியழுவதுதானே அடித்தவனுக்கு நாம் அடிக்கும் பதிலடி.

ஒரு தந்தையின் கண்டிப்பால் சாதிக்க முடியாதவைகளை ஒரு தாயின் கண்ணீர் வார்த்தைகள் சாதித்துவிடுவதால் இதனை ஒரு பலம் என்றே நான் நம்புகின்றேன். இவைகள் கல்தடுக்கி இரத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொட்டுவதுபோல இயல்பாகவே வெளிவந்தவைகள். இந்த யுத்தம் என்மனதைக்குதறிய காயங்களின் வடிவங்கள் இவைகள்.

நான் 1990 - 2000 ஆண்டு வரையான காலப்பகுதிகளில் எழுதிய கவிதைகளுள் ஒரு பகுதியை தொகுதியாக்கியிருக்கிறேன். இதில் ஒரு கவிதையைத் தவிர ஏனைய அனைத்துக் கவிதைகளும் எமது நாட்டின் தேசிய பத்திரிகைகளில் பிரசுரம் பெற்றவைகள்தான். இதில் கணிசமான கவிதைகள் இவை வெளிவந்த காலப்பகுதிகளில் நண்பர்களால் விமர்சிக்கப்பட்டவைகள் என்றாலும் ஒரு பூரணத்துவமான விமர்சனத்துக்குட்படவில்லை. எனவே கவிஞர்கள், கவிதை விமர்சகர்கள் எனது கவிதைகளை விமர்சிக்கலாம்.

செதுக்கப்படாமல் இருப்பதாலேயே பல சிலைகள் இன்னும் கல்லாகவே கிடக்கின்றன.

பாடசாலைப்பருவத்தில் பத்திரிகை படிக்கும்போது கவிதையைத்தவிர மற்ற அனைத்தையும் படிக்கும் பழக்கம் கொண்ட எனக்கு முதன் முதல் பிரபல கவிஞர்களின் நூல்களை அறிமுகம் செய்து, சுவைக்கத்தந்து அதில் ஈடுபடக் காரணமாய் அமைந்த உறவின நண்பன் எஸ்.எல்.அல் அமீன் -

பாடசாலையில் மாணவர் மன்றமொன்றில் வாசித்த எனது கன்னிக் கவிதையினை செவிமடுத்து என்னை பாராட்டி சில கவிதைநூல்களை பரிசாகத்தந்து ஊக்கப்படுத்திய மருதானை ஸாஹிரா கல்லூரி விடுதிப் பொறுப்பாசிரியரான அல்லா பிச்சை ஆசிரியர், என்னை முதன் முதல் தினகரன் பத்திரிகையில் அறிமுகப்படுத்தி எழுதியவரும், ஒரு வாசகனாய் இருந்து எனது கவிதைகளை அவ்வப்போது விமரிசித்து ஊக்கம் தருபவருமான எஸ்.எம்.தலீபா (ஓடையூரான்)-

பல்வேறு வழிகளிலும் இளைஞர்களுக்கு ஆதர்சமாக விளங்கும் எங்கள் அன்புக்குரிய பாராளுமன்ற உறுப்பினர் பஷீர் சேகு தாவூத்-

முதன்முதல் பத்திரிகைக்களம் தந்து என் கவிதைகளை பிரசுரித்த கவிதாசாகரம் பொறுப்பாசிரியர் வி.ஜெகதீஸன்-

பல நல்ல புத்தகங்களை படிக்கத்தந்து என்னை தேடல்கொண்டவனாக்கிய எனது பிரதேசத்தின் மூத்த எழுத்தாளர் எஸ்.எல்.எம். ஹனீபா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பல சந்தர்பங்களில் என்னை ஊக்கப்படுத்திய ஆசிரியர்களான யூ.அஹமட். எம்.எல்.கலீல் ரஹ்மான், வாழை இப்னுஹஸன், வாழைச்சேனை அமர், ஏ.ஜீ.எம்.சதக்கா மற்றும் எல்.ரீ.ஏ.சஜ்ஜாத், எம்.எஸ். முகைதீன் இந்நூலுக்கான ISBN இலக்கம் பெறுவதில் உதவிய இளநெஞ்சன் முர்ஸிதீன் -

அட்டைக்கான எனது சிந்தனையினை அப்படியே படம் பிடித்துத்தந்த ஈ.எல்.மஹ்றூப் ஆகியோருக்கு நன்றியுணர்வுடன் நினைவு கொள்வதோடு நான் வேண்டிக்கொண்டபோது தனது வேலைப் பழுக்களுக்குள்ளும் மனமுவந்து மிகக்குறுகிய காலத்துக்குள்ளேயே ஒரு சிறப்பான அணிந்துரையினை வழங்கியது மாத்திரமல்லாது கணணி எழுத்துக் கோவையைப் படித்து, 'புரூப்' பார்த்து, ஆலோசனைகள் வழங்கியவர் மூத்த கவிஞர், எழுத்தாளர் அல்.அஸூமத் அவர்கள்.

இத்துறையுடனான எனது ஈடுபாட்டினை இனம் கண்டு வானொலி, தொலைக்காட்சிகளிலும் வாய்ப்புத் தேடித்தந்து வருவது மாத்திரமல்லாமல் இத்தொகுதி வெளிவருவதில் என்னைவிட அதிகம் முயற்சித்த எமது பிரதேசத்தின் முன்னோடிக் கவிஞரும் அனுபவம் வாய்ந்த வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளருமான அஷ்ரப் சிஹாப்தீன் அவர்களுக்கும் என் உளந்துவும் நன்றிகள்.

எமது யாத்ரா என்ற அமைப்பின் ஐந்தாவது வெளியீடாக இந்நூல் அமைவதையிட்டு நான் மிகவும் பெருமிதம் அடைகிறேன்.

இறுதியாக என் கலை இலக்கிய முயற்சிக்கு வீட்டுச் சூழலை இசைவாக்கித் தந்து அதில் ஒரு சுதந்திரப் பறவையாகவே பறக்கவிட்ட, விடுகிற என்தாய் தந்தை சகோதரிகள், மச்சான்மார், குழந்தைகள் அனைவருக்கும் நன்றிகள்.

அன்புடன்

எஸ்.நளீம்

01-10-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரக்தியில்

எல்லோருக்கும்
ஹிட்லரிசத்தைப் போதியுங்கள்

பின்பு
பயங்கரவாதத்திற்கு நீர் ஊற்றுங்கள்
இனப்படுகொலைக்கு உரம்போடுங்கள்
பிரிவினை வாதத்தை வளர்க்க
உயிரைக் கொடுத்து உதவுங்கள்

யுத்தங்களை எரியவிட்டு
எண்ணெயூற்றுங்கள்
எடுத்ததற்கெல்லாம் மனிதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுங்கள், வெட்டுங்கள், குத்துங்கள்
கொல்லுங்கள்
வீட்டோடு சேர்த்தே
குட்டி குருமானோடு எரியுங்கள்

மனிதன்
அகதியென்றேனும்
ஒன்று படட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.02.1999

கோபம் மேலிடத்
தலையை வெளியே எறிந்தேன்
யன்னலினூடே
தூங்கி எழுந்த அசல் அழகாய்

என் இமை இறுக்கம் பிரியும் படியாய்
அலறியிருந்தது
மறி கொண்ட பூனையாட்டம்
அந்த இரு சிறுசுகள் தாம்

ஒருவரை ஒருவர்
அடித்துக் கொண்டனர் விளையாட்டாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவர் கரத்திலும்
கொசுவி எடுத்த
இரு தேசியக் கொடிக்கம்புகள்

சற்றுச் சிறுகப் பார்த்தேன்
வெளிச் செல்ல எத்தனிக்கும்
ஒரு இளைஞனைத்தடுத்து
அவன் அன்னை நம்பிக்கையாய்ச் சொன்னாள்
“இன்று தேசிய தினம்
எங்கேயும் போகாதே குண்டு வெடிக்கும்“
இந்த வீதியில்
அதிகமானோர் பேசிச் சென்றனர்
இன்று பாதுகாப்பற்ற நாளென்றுதான்

என்றாலும் பார்த்தேன்
தனது துயரங்களையெல்லாம்
வெளிக்காட்ட
ஒரு வெள்ளைக் கொடிக்கே வக்கில்லாத
குடிசைக் கூரைகளிலெல்லாம்
வர்ணக் கொடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கஷ்டமான கவிதை - 1

புவியின் கவர்ச்சி விசை
என்னை மட்டும் புறக்கணித்துவிட்டது
எருக்கிலைப் பஞ்சாய்
காற்றிலே மிதந்து
புவியை விட்டு உயர்ந்தேன்

சந்தோசத்தால்
இதயம் வெடித்துச் சிதறியது
உயிரை உயிராய் மதிக்காத
இந்த உலகை விட்டுப் போவதில்
எனக்கு உடன்பாடு தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கேடு கெட்ட
மனிதர்கள் இல்லாத வாழ்க்கை
எத்தனை மகத்தானது தெரியுமா

தாய் இல்லாத்துயர் ஒன்றுதான்
என்னைத் துன்புறுத்தியது
இல்லையென்றால்
இந்த வாழ்க்கையே
சொர்க்கமென்பேன்
பல்லாயிரம் மைல்கள்
மேலே சென்றிருப்பேன்
உருண்டையொன்று
என்னை நெருங்கியதோடு
கவர்ந்திழுப்பதுவும் விளங்கியது

புவி என்னை துரத்தியபோது
அது என்னை அணைத்துக்கொள்ள
அழைப்பது
மனதுக்குள்
மத்தாப்பு வெடிக்க வைத்தது

காலூன்றினேன்
அது பெரியதோர் 'கோள்'
புவி அதன் குட்டியாக இருக்கலாம்

தேசங்களெல்லாம்
அவுஸ்திரேலியாவாக, காஷ்மீராக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவரெலியாவாகப்
பச்சைப் பசேல் என்று....
குயில்களெல்லாம்
புதுக்கவிதையில் கூவின
சிட்டுக் குருவிகள்
"ஹைக்கூ" சொல்லிக் கத்தின
அது கவிதைத் தேசம் தான்
சமாதானத்திற்குப் பஞ்சமில்லை.

இதயம் விரிந்து
பலமடங்காய் மலர்ந்தது

டக்....டக்... காலடியோசை
துப்பாக்கி வேட்டுக்கள்...
இலங்கை மொழியில் கூக்குரல்கள்

ஓடிச்சென்று உற்றுப் பார்த்தேன்
மனித மாமிசத்தைச் சப்பிச் சப்பி ...
பல்லை இளித்து வள்ளென்றது நாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கஷ்டமான கவிதை - 11

தற்கொலை
தண்டனைக்குரிய குற்றமில்லாதிருப்பின்
அதுவே இங்குப்
பலருக்குப் பயனுள்ளதாயிருக்கும்
என்ன செய்ய
இந்த அடிமைத்தனம் மிகுந்த
வாழ்தலின் சலிப்பில்
ஒரு மண் புழுவாய்
மண்ணுக்குள் புகுந்து கொண்டேன்

சும்மா சொல்லக் கூடாது
மண்ணுக்கு வெளியே என்ன உலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுக்குள்ளே தான் உலகமே இருக்கிறது
மிஞ்சிப் போனால்
நூற்று ஐம்பது வருடங்கள் முந்திய
சமூகம் தானே வெளியே இருக்கிறது
ஆனால்
ஆயிரக்கணக்கில் முந்திய சமூகமல்லவா
உள்ளே இருக்கிறது

இங்கே தான் மனிதமில்லை
மரணித்த எல்லோரிடமும் மனிதமிருந்தது
பலரைப் பேட்டி கண்டேன்
வாக்கு மூலங்கள் பதிவு செய்தேன்
மதபேதம், மொழிபேதம்
மண்ணுக்குள் இருப்பதாய்
எனக்குத் தெரியவில்லை

மயானம், மையவாடி, தகனத்திடல்
அனைத்திற்கும் சென்றேன்
செத்தவர்களைவிடச்
சாகடிக்கப்பட்டவர்களே
உள்ளே அதிகமிருந்தனர்

மண்ணுக்கு வெளியே வாழ்வோரின்
சமாதானத்திற்காய் மண்ணுக்குள்ளேயே
பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது

அதில்
நானும் கலந்து கொண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதம் சம்பந்தப்படாத
ஒரு சமாதானத் தீர்வுத் திட்டம்
எனக்குப் போதிக்கப்பட்டது
நம் தீவிற்கான
சமாதானத் தூதுவனாக நான்
அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டேன்

இலங்கையில் இதுகாலவரை
விடை காணப்படாத ஒரு வினாவிற்கு
விடை கண்டதன் மகிழ்வில்
மண்ணுக்குள்ளிருந்து மீண்டு
ஒரு வெண் புறாவாய்
வெளியே பறந்தேன்

உயிரினங்களின்றித்
தீவு வெறிச்சோடிக் கிடந்தது
விகாரை, கோவில், பள்ளிவாசல் எல்லாமே
சிதைந்து, பாசிபடர்ந்து கிடக்க
சிங்கள, தமிழிலான
ஆவணங்களையெல்லாம்
கறையான் அரித்துக் கொண்டிருந்தது

சுற்று முற்றும் தேடிப் பார்த்தேன்
தீவின் ஒரு மூலையில்...
குடியிருப்புக்குதவுமா என்று
நம் நிலத்தைப்
பரிசோதித்துக் கொண்டிருந்தான்
ஒரு வெள்ளையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசின் லாவாக்கள்

இதயக் கற்களோடு மோதிக்
கவிதை நொறுங்கிச் சிதறுகையில்
இப்போது
கடதாசியில் பேனாவால் எழுதுவதான முறை
மீள் பரிசீலிக்கப்பட வேண்டியதாகிற்று

கனரக ஆயுதம் கொண்டவன் முன்
எப்படி அரிவாளோடு போராடுவது

எதற்கும் உருகாத உலோகமாய்
மனசுகளிருக்க
காற்றுக்குச் சிதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருக்கிலைப் பஞ்சாய்க் கவிதையிருந்து
என்ன செய்ய

பாறைகளையே பொசுக்கிவிடும்
அக்கினி ஜுவாலை
உள் எழும்போது
இதை எதில் இறக்கி வைப்பது
இரும்பில்
வெடிமருந்தால் எழுதுவதாய்
ஏதாவது கண்டு பிடிப்போம்

இனிக் கவிதை எழுத
ஒரு எறிகணையின் சக்தியேனும்
பேனாவுக்கு வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வக்கிரத்தின் உக்கிரத்தில்...

மூட்டிய அடுப்புக்குள்
ஜீவிப்பதான வலி
ஓலைக் கூந்தலில்
நெருப்பைக் கொளுத்தி
நாங்கள்
கட்டெறும்பு சுட்டதென்னவோ
உண்மைதான்
அதற்காக வானமே
சூரியனைக் கொளுத்தி
இப்படி
எங்களைக் கருக்காதே

விஞ்ஞான கர்வத்தில்
நாங்கள்
உன் ஓசோன் ஆடையை
கந்தலாக்கிய தென்னவோ உண்மை தான்
சூரியனே
அதற்காக கட்டிய ஆடைக்குள்ளேயே
இப்படி எங்களை
அவித்தெடுக்காதே

உருகி வடியும் மெழுகுவர்த்திக்காய்
இரங்கல் கவிதை படித்தது நாங்கள்
இப்போது
எங்கள் எல்லோருக்கும் பொதுவான
திரியாய்ச் சூரியன் எரிய
நாங்களே
உருகிக் கொண்டிருக்கிறோம்
விட்டிலுக்கேனும் பரவாயில்லை
மரண தண்டனைதான்
எங்களுக்குத்தான்
சித்திரவதை

தொடர்ந்து வந்த துன்பங்களிலெல்லாம்
எனது
இரு கண்களும் தான் அழுதன
நீ தரும் துன்பத்தில்
உடலின் உரோமக் கண்களுமல்லவா
சேர்ந்து அழுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் வக்கிரத்தின் உக்கிரத்தில்...
எரிமலையாய் மனசு குமுற
“லாவாக்“ குழம்புகளாய்
வியர்வை வடிகிறது

சூரியனே
உன் கோபத்தைக் கொஞ்சம் தணி
நான் கவிதை எழுதிய காகிதமேனும்
சற்று எரியாதிருக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுதந்திரம்

அரசி
சுதந்திரம் பெற்றுத் தருவாயா
தேசம் சுதந்திரம் கண்ட
பொன் விழாவிலேனும்

உனக்குத்தானே
நாற்காலி தந்தோம் அதில்
மதமும் மொழியும் எப்படி அரசோச்சும்

அனைத்தும் துறந்தோரின்
காவிப் போர்வையின் முடிச்சுக்குள்தானா
இலங்கைத் தீவு திறக்கப்படாமல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தாயா
இனவாதமில்லாத
புத்தனின் போதனையிலும் கலப்படம்
சொல்
இப்படியிருக்க எப்படியம்மா
ஆலிங்கணித்து வாழ்வது
மதங்களும்.... மொழியும்...

செங்கோல் எடுத்த
சமாதான தேவதையே
வேண்டாம்
இனத்துவேசம் எரியும் வரையும்
தமிழின் எல்லையால்
தீவு கிழிவதென்பதே தீர்வென்றாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்னும் எழுதாத அந்தக் கவிதை

முட்டை பொரித்து
குஞ்சு பெருத்து
தொண்ணூறிலேயே
நிறையுடலியாகிட்டு கவிதை

கண்ணாடி ஜன்னலுக்குள்
அடைபட்டு
வெளிவர எத்தனிக்கும்
ஒரு வண்ணத்துப் பூச்சியாய்
அவ்வப்போது வந்து
முட்டிச் செல்கிறது அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈன்றெடுக்கவே
ஒவ்வொரு முறையும்
காகிதத்தில்
பேனாவை நட்டாலும்
வேறொன்றையே
எழுதி முடிக்கிறேன்
பிரசவத்தில்
குழந்தையைப் பிறக்கவிடாது
இறுக்கிப் பிடிப்பதான வலி

கூப்பிடு தூரத்தில் அவர்கள்
இடையில்
காவலரணை மட்டும் நம்பி
எப்படிக் கவிதை எழுதுவது

அவர்கள் தண்டிப்பதற்கு
நான் தொப்பியணிந்திருப்பதொன்றே
போது மென்றிருக்கையில்
அவர்களின்
துன்புறுத்தலுக்காய்
நான் வாய்விட்டு அழுவது கூட
குற்றமாகாதா

ஆக
அந்தக் கவிதை
எனக்குள்ளேயே செத்துப் போகட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாமவனின் புலம்பல்...

சொல்லுங்கள்
பூர்வீக மண்ணை விட்டுப்
பிரிந்து போகிறேன்
சொல்லுங்கள்
இறந்து போகவும் சம்மதம்

சுட்டுக் கொல்ல வேண்டுமா
சொல்லுங்கள்
பள்ளி வாசலில் வந்து
வசதியாய் வரிசையில் நிற்கிறேன்

வெட்ட வேண்டுமா
வாளை நீட்டுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து வீழ்கிறேன்
ஒரு முறை கொன்று
ஆத்திரம் அடங்கவில்லையா

அப்படியானால்
இறைவனை வேண்டி
மீண்டும் மீண்டும் என்னை
உயிர்த்துத் தருகிறேன்
மீள மீளக் கொல்லுங்கள்
இசைந்து தருகிறேன்
உங்கள் பங்கர்களின் மண் சாக்காய்
என்னை அடுக்குங்கள்
மோட்டார் குண்டுகளுக்கு
என் மூளை சிதறட்டும்
சீலைத் துண்டாய்ச்
சோர்ந்து கிடக்கிறேன்
என்னை எடுத்து
உங்கள் துப்பாக்கிகளைத்
துடைத்துக் கொள்ளுங்கள்

எப்படி வேண்டுமானாலும்
என்னைக் கொல்லுங்கள்
அதற்கு முன்
சொல்லுங்கள்

நண்பர்களே
நீங்கள் நாடு கேட்கிறீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்....
நீங்கள் நாடு காக்கிறீர்கள்
ஆனால்.....
நான் என்ன கேட்டேன்
இறக்கவும்... இழக்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவு தந்த கவிதை

பல திசைகளிலும் படரவிட்ட எல்லாமே
ஒரே இடத்தில் வந்து தடைப்பட்டதும்
சிக்குக் கட்டியது சிந்தனை

ஒரு கணம் இயங்க மறுத்து
விறைத்துப் போனது தலை
அக்கணமே
இனம் புரியாத ஒரு சக்தி
உடலெல்லாம் பரவி
முறுக்கேறி விம்மிப் புடைத்தன
நரம்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை வெறி தலைக்கடிக்க
நிதானத்தை இழந்தது மூளை

எழுந்து சென்று
கருக்கிய முந்திரிகை விதையைத் தட்டுவதாய்
ஒரு கல்லில் தலையை வைத்து
இன்னொரு கல்லால்
எனது தலையை நானே உடைத்து
மூளையை எடுத்து
பிரித்துப் பார்த்தேன்
அதில் எல்லா இடத்திலும்
"வேலை கிடைக்காதா" என்ற வினாக்குறிகள்

தாமதியாமல்
நெஞ்சைப் பிளந்து
இதயத்தை வெளியே எடுத்து
இரண்டாய்க் கிழித்து
உள்ளே உற்றுப் பார்த்தேன்
அதற்குள்
அவளைத் தவிர வேறொன்றுமில்லை.

நான் என்ற இளைஞனுக்குள்
இவ்வளவுதானா
என்ற ஏக்கப் பெருமூச்சோடு இறந்து போகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றில் எல்லாம் எமனின் காலடிகள்

பிணப் புதையல்களுக்குள்ளும்
எலும்புக் குப்பைகளுக்குள்ளுமாய்
இது
நிர்ப்பந்தித்த ஜீவிதம்

இங்கே அதிகம்
உயிருக்குப் பயப்படவேண்டியிருப்பது
ஆயுதபாணிகளை விட
நிராயுதபாணிகள் தான்

இந்த இரு தசாப்த யுத்தத்தில்
அதிகம் இறந்தது
பொது மக்கள்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குள்
அன்றாடம் இலக்கில்லாது வரும்
புல்லட்டின் இலக்கிற்குத் தப்பிப்பதே
பெரும் பாடாகிப் போகிறது

இங்கே
புல்லட் பயணிக்காத
அண்ட வெளிகளில்லை
காற்றிலெல்லாம் அதன் காலடிகள்
எனக்காகக் காயப்பட்டுக் கிடக்கும்
என் வீட்டுச் சுவர்கள் சாட்சி
பல முறை நான்
படுத்துக் கொண்டதாலும்
ஒளித்துக் கொண்டதாலுமே
உயிர் தப்பினேன் என்பதற்கு

இங்கே இரவு வரும்
விம்மி அழுது விழித்திருக்கப்
பகலும் வரும்
கூடி ஒப்பாரி வைத்து
இறந்தோரைப் புதைக்க

ஆக
ராசாத்தி
யுத்தம் பறித்த என் உறவினரை
சொத்து சுகத்தைக் கேட்கவில்லை
நிவாரணமோ
நஷ்ட ஈடோ கோரவில்லை
நீ சொன்ன சமாதானத்தை
கொஞ்சம் சமைத்துத் தா
நாங்கள் மீளத் துளிர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிசலின் விசாலம்

காலம் ஒப்பாரி வைத்து
ஒரு வை. அஹமத்தாக
உதுமானாக, சரீப் சேர்மனாக
புகாரி விதானையாக
நீயும் என்று...

மனசும் கிடந்து மல்லுக்கட்ட
துளிர்த்த சிந்தனையை
கிள்ளி எறிந்து விட்டு
இங்கே
எத்தனைபேர்
குப்புற விழுகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ சுட்ட வடு இன்னும்
மழுங்கவில்லை
எங்கள் மனசுகளில்....
இறைவனின் இல்லத்தில்
தாம்பூலம் பூசிய
உனது விரலையும்
ஊருக்குள்
உயிரை அரைத்து
மரணம் சமைத்த கரத்தையும்
பூர்வீக மண்ணின்
மூலையில் பிடித்து
உதறி விட்ட உன்னையும்
நம்பி.......

இன்னும் உனக்காக
எங்கள் கரங்களின் மயிர்கள்
எப்படி சிலிர்ப்பது....

என்றாலும்
தென்னை ஓலை போல
ஒட்டி இருக்கிறோமே
ஆதலால்
கையை கொடு
குலுக்கிக் கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுக் கவிதைகள்

விலங்குகளை வேட்டையாடி
மகிழ்ந்தவர்கள்
மனிதர்களையே வேட்டையாடும் இன்றில்....

உயிர்களென்றால்
ஜீவகாருண்யம் பேசுபவர்கள்
மனிதர்கள் என்றால்
உயிரோடே எரிக்கும் இன்றில்....

வாழப்பிறத்தல் என்பதற்கு மாறாகப்
பிறந்து விட்டதற்காக வாழும்
அகதிகள் அதிகரித்த இன்றில்......
வாய் கூசாமல் இனவாதம் பேசுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை கோரல்
என்றாகிய இன்றில்........

சகோதரா
கடித்த எறும்பையும் கசக்க மனமின்றி
மிருதுவாய்ப் பிடித்துவிடும்
உன் மெல்லிய இதயத்தை எடுத்துக்கொண்டு
என்ன செய்கிறாய்

எனதிதயம் என்னை இகழ்ந்து
முகத்தில் உமிழ்கிறது....
இங்கே என்னிடமும் இதயமிருக்கக் கூடாது
இல்லையென்றால்
நான் பிறந்திருக்கவே கூடாது

இத்தனைபேர் வாழ்கிறார்களே
இதயமில்லாமலும்...

கடைசியாக நாம் இருவரும்
ஞானம் அக்கா வீட்டில்
முந்திரியம் பழம் தின்ற
ஒரு தசாப்தத்திற்கு முந்தியதான அன்றில்...
எனது தொப்பியை நீ அணிந்து
உனது பொட்டை
எனது நெற்றியிலொட்டி
அழகு பார்த்துக்கொண்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது
இப்போது முடிகிறதா
நாம் உரையாடிக் கொள்ளவேனும்....
நீ வேறு
நான் வேறென்றாகியதற்கு
நீயும் நானும் மட்டுமல்ல
உன்னையும் என்னையும் பிரிக்கும்
பங்கர்களுக்கும்
ஆயுதங்களுக்கும் பங்கிருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டடை தட்ட ஒரு கவிதை

எல்லாமே பழசாகிட்டு
நவீனம் என்ற சொல்லும் தான்
இன்று பிறந்த
குழந்தையின் மூளையிலும் சாதி ஒட்டடை

இந்தச் சாதி, மத, மொழியெல்லாம்
எமக்கு ஆபரணமாய் இருந்து
அழகுபடுத்தியதை விட
அசிங்கப்படுத்தியதுதானே அதிகம்
அமைதிப்படுத்தியதை விட
அடித்துக் கொள்ள வைத்ததுதானே அதிகம்
காப்பாற்றியதை விட -
நிர்க்கதியாக்கியதுதானே அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிக் கைவிலங்கை உடைத்துச்
சமயக் கால் கட்டை அவிழ்த்து
மொழிக்கண்கட்டை விலக்கி
இருள் வட்டத்திலிருந்து
ஒளி வட்டத்திற்கு வருவோம்.

பூதாகாரமாய் வளர்ந்திருக்கும்
இவற்றை உடைத்து
எமக்குள் இருக்கும்
இடைவெளிகளை நிறைத்துப்
பாலம் அமைப்போம்

அண்ணனானாலும்
தம்பியானாலும் எல்லோரும்
ஈழமாதாவின் பிள்ளைகள் என்பதை
மனதில் செதுக்குவோம்

ஆயுதக் கலாசாரத்திற் கெதிராய்ச்
சமாதானக்
கலாசார மொன்றைச் சமைப்போம்

தேசியக் கொடியிலிருக்கும்
சிங்கத்தின் கரத்தில்
வெண்புறாவை வரைவோம்

மகாவலியைத் திசைதிருப்பி
இயற்கையையே மாற்றயமைத்த நாம்
எம் சிந்தனையைத் திசை திருப்பிப்
பயனுடையதாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசங்கத்திற்குப் பெரிதாய்
ஒரு -
மக்கள் சங்கமும் அமைப்போம்

இந்த மேல்சாதி, கீழ்சாதி,
சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற
சொற்களெல்லாம் செயலிழந்து போகட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போர் முனையில்
ஓர் சமாதானக் கனா

நான் மனிதன்
எனக்கும் இறக்கை இருந்தது

உலகின்
ஒரு ஓரம் விடாமல் சிறகடித்தேன்

புவிக்குள் புதைந்து கிடக்கலாமென்று
ஒவ்வொரு மண்ணாகப் பிரித்துப் பார்த்தேன்

அது வனவாசம் சென்றிருக்கலாமென்று
காடுகளெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணி வைத்துத் தேடினேன்
அதனை - உலகின்
எந்த மூலையிலும் சந்திக்க முடியவில்லை
புவிக்கு வெளியே தேடினேன்
தொலைவில்..
மிகத் தொலைவில்...
மிக மிகத் தொலைவில்...
ஒரு சிறிய கிரகத்துள்
சுருண்டு கிடந்தது.

எங்கள் தேசத்திற்கென்று
அழைப்பு விடுத்தேன்
முன்பும் அழைத்துச் சென்று
அவமதித்ததாகக் கூறி மறுத்து விட்டது.

வரும்படி -
கையைப் பிடித்து இழுத்தேன்
அதன் நிம்மதியை கெடுப்பதாகச்
சினந்தது

நான் விடவில்லை
மீண்டும்... மீண்டும்...
தொல்லை தாங்க முடியாமல் சொன்னது
நான் வருவதென்றால்
அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியக் கொடியாய்போன
ஆயுதங்களைக் கீழே போடச் சொல்
முகமூடிகளை கிழித்தெறியச் சொல்
இறுகிக் கிடக்கும்
இதயக் கதவை திறந்து வைக்கச் சொல்.

ஷெல் தும்மல்
துப்பாக்கிக் குரைப்பு
ஹெலி உறுமல் காதைக் கிழிக்கக்
கண் விழித்தேன்
பக்கத்துக் கேம்பில்
'ஃபயரிங்' - போலிருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊசலாடும் பிரேதம்

எரிந்து தீர்ந்த
உணர்ச்சிகளின் சாம்பலிலிருந்து
எழுந்து பறக்கிறது
ஒரு பீனிக்ஸ் பறவையாய்
இக் கவிதை

உடைந்த மனசுடன்
ஊசலாடுவதன் சலிப்பில்
மரணித்தவர்களை நினைத்து
பொறாமைப்படுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநீர் கழித்துப் பல நாட்களாகிட்டு
குடிக்கின்ற நீர்
அன்றாடம் அழுவதற்கே போதாததால்

வக்கிரங்கள்
வரம்புடைத்த போதெல்லாம்
சவர்க்கார நுரை நீரில் கலைவதாய்
என்றோ -
கரைந்து முடிந்திட்டேன் நான்

இங்கே
ஊர்ந்து திரியும் மனிதங்களிடம்
ஒரு வார்த்தையேனும் பேசிப் பாருங்கள்
ஒரு துளியேனும்
இதயங்களில் உயிர் இருக்கிறதா என்று

நான்
மரணமாகிட்டேன்
என்றாலும்
நாசிப் பிரதேசத்தில் காற்றின் நடமாட்டம்
நின்று விட்டால் தானே
இந்த உலகம் பிரேதம் என்று நம்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சிகரெட்

இன்றைய இளைஞர்களின்
கனவுக் கன்னி

மனையாளின் அங்கீகாரத்தோடு
கணவன்மார் வைத்திருக்கும்
சின்னவீடு

ஐஸ்லாந்திற்கென
பிரத்தியேகமாகப் படைக்கப்பட்ட
வெள்ளைக்காரி
ஆனால்
ஆபிரிக்காவிலும் என் அபிமானிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பு என் தலைப்பூ...
எனக்குப் பூ வைப் போர்க்கு
என் உடல் எரித்துக்
கொஞ்சம் தென்பு கொடுப்பேன்

புகை என் புன்னகை
என் புன்னகையில்
புதைந்து போனோர்தான் எத்தனைபேர்

இருமல்
நான் இசைத்த வாத்திய விருந்து

புற்றுநோய்
என் பிரமாண்டமான தயாரிப்பு
இருந்தும் நான் போற்றப்படுபவள்

ஆண்கள் பெண்ணைத்தொடக்
கைக்கூலி கேட்கும் இன்றில்தான்
என்னைத் தொடக்
கைக்கூலி கொடுக்கிறார்கள்

உதட்டு மயானத்தில்
என் தகனக்கிரியை நடக்கும்

எனக்குக்
கொள்ளி வைப்போர்க்குக்
கொள்ளி வைப்பவள் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரைக்க ஒரு நாய் வேண்டும்

நாய் என்றால்
அது குரைக்க வேண்டும்
கடிப்பது இரண்டாம் பட்சமே

கடிக்காததும் நாய்தான் - ஆனால்
குரைக்காதது நாயாகாது

கடிப்பது பாசிசம்
குரைப்பது ஜனநாயகம்
பல நாய்கள் கடித்துச் சாதிக்காததைக்
குரைத்தே சாதித்திருக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரைக்க ஒரு நாய் வேண்டும்
எங்கள் நாய்களால்
குரைக்கவும் முடியவில்லை
கடிக்கவும் முடியவில்லை

குரைக்கின்ற
மற்ற நாய்களையும் விரட்டிவிட்டு
ஊர் நாய் என்பதையே
தகுதியாய்க் கொண்டு
இந்த இயலா நாய்களையே
வாசலில் கட்டினோம்

பாவம்
அது என்ன செய்யும்
நண்பன் வந்தாலும், எதிரிவந்தாலும்
நாய்க்குரிய பண்பில்
வாலை மட்டும் ஆட்டுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்கம்

வேட்டவாளிக் கூடுபோல
புத்துமண் சுவருகட்டி
இருக்கு மேய்ந்த நரைத்த வீடு
அதுதான் எங்கள் தங்குதளம்

உம்மம்மா, உம்மா, நான்
பிறந்ததெல்லாம்
இதுலதானாம்

இப்போது சிதைந்து கிடக்கும்
இந்த வீட்டின் நிலத்தில்
உம்மாவின் கைரேகையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது -
குழந்தைப் பருவக் காலடியும்
இன்னுமிருக்கு....

நான் குயில்களோடு கூவித்
தர்க்கித்திருக்கிறேன்
இந்த வீட்டின் முற்றத்து ஆலமரத்தில்....

சின்ன வயதில் துள்ளித்திரிகையில்
குயில்களுக்கு நான் விரோதி
இன்று அது எங்களுக்குத்
துரோகியாகி விட்டது
அந்த விதை வெடித்து மரம் வளர
நிழல் வளர்வதாய் நினைத்திருந்தோம்

எங்கள் தங்குதளம்
புனித பூமியாகிட்டு
நாங்கள் தான் களைகளாய்ப்
புடுங்கி வீசப்பட்டு விட்டோம்

இப்போதெல்லாம்
பூவரசை முளைத்தாலே
பயமாக இருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடைசிச் சொட்டு உசிரில்

தீ கொட்டும் சூரியனின்
சடையைப் பிடித்திழுத்து
கட்டிப்புரண்டு சண்டை பிடித்து....

நிலவின் விளிம்பில்
காலைத் தொங்கப் போட்டமர்ந்து
நட்சத்திரங்களைப் பொறுக்கி
சொட்டிக்கல் விளையாடி....

உலகத்தை எடுத்து
வாய்க்குள் எறிந்து மென்று
பபிள்கம் போல ஊதி உடைத்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேனாவை
பூவாகவும், துப்பாக்கியாகவும்
சுழற்றிய மகாகவி
சதுரப்பன் பாயில்
பட்ட மரமாய் வீழ்ந்து கிடந்தான்

அங்கமெல்லாம் செத்துக்
கடைசிச் சொட்டு உசிரில்
குறுகுறுத்தது இதயம் மட்டும்

வளைத்து வளைத்து வந்த இருளைத்
துரத்தித் துரத்திச் சவுத்துப்போய்ச்
குருடுபத்தியது விளக்கு
சுத்திச் சுத்திப் பறந்து
மயங்கி விழுந்தது விட்டில்

ஊருக்காக உலகுக்காக
அழுதவனுக்காக அழ....
ம் ஹூ ... ம்

சதுரப்பன் பாயில்
பட்டமரமாய் வீழ்ந்து கிடந்தவனின்
உடலிலே ஊர்ந்து
ஒவ்வொரு எலும்பாக எண்ணிக்
கணக்குப் படித்தது
அவனது கைக் குழந்தையொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பில் இருக்கும் மச்சானுக்கு

உங்கள் இதயத்தில்
பலாப் பிசினாய் ஒட்டிக்கிடந்த
எங்கள் உறவை
எப்படி
உங்கள் மீசையைப் போல்
அவ்வளவு எளிதாக
வழித்தெறிய முடிந்தது?

நீங்கள் அன்னிய மொழிகளுக்கு
அடிமைப்பட்டுப் போனாற்போல்
எத்தனையோ நண்பர்களின்
சிநேகத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கிப்போயிருக்கலாம்
அதற்காக
தமிழை மறந்தாற்போல்
எங்களையும் மறந்து போவதா?

உங்கள் தலை நகரில்
நாகரீகம் என்ற முகமூடியோடு
அநாகரீகம் அராஜகம் புரியுமே

நண்பர்களோடு சேரும்போது
நீங்கள் 'சிகரட்' பிடிக்காதது
தரக்குறைவாகத் தெரியுமே!
ம(ா)துவோடு
உறவு வைக்காதவர்கள் அங்கே
மட்டமாக
மட்டிடப்படுவார்களே!

அன்பு மச்சானே....!
தயவு செய்து அவைகளுக்கு மட்டும்
அடிமையாகி விடாதீர்கள்
பின்பு
எங்களை மறந்தாற்போல்
அவ்வளவு எழிதாக உங்களால்
அவைகளை
மறந்து விடமுடியாமல் போகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவணி

சேலையின் சின்னப் பருவம்!

சோள உடலை மூடிய
மூன்றாவது செட்டை

பருவம் வந்ததும் முளைத்த
பறக்க முடியாத இறக்கை

மொட்டு பூத்து விட்டதை
கௌரவிக்கும் பொன்னாடை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவை மரத்தில்
பழங்களைப் போர்த்திய
பொலித்தீன் உறை!

இடுப்பிலிருந்து
தோளுக்கு வளைந்தோடி
அங்கிருந்து விழும்
நீர் வீழ்ச்சி!

சூரியப் பார்வையை வடிகட்டி
பட்டுமேனியை பாது காக்கும்
ஓசோன் படலம்!
வைரக் கற்களைச் சுற்றிய
'டிசு'க் கடதாசி!

நிலவிற்கு முக்காடுபோடும்
மேகத்திரை!

கிராமத்து நாகரீகம் இது!
வீட்டில் அடங்கிக் கிடக்க
பெண்ணே பெண்ணுக்கு
இட்டுக் கொள்ளும் கால்கட்டு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அநீதி

பறந்தால் மாலை அழகு
கரைந்தால் காலை அழகு
இவர்கள் -
கூலி வாங்காத சுத்திகரிப்பாளர்கள்
பறவைகள் உழைப்பாளர் படை
பறவைகளுக்குள்
இவர்கள்தான் உழைக்கும்படை!

காக்கைதான் அசல்!
அதனை 'பிரின்ட்' செய்துவிட்டு வீசிய
'நெகடிவ்'தான் புறாக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மெல்பர்ன்' மைதானத்திற்கு
வெண்பறவைகளே அழகென்றால்
எங்கள் 'கெத்தாராமை'க்கு
காக்கைகள் தானே அழகு!

குயிலிடம் வாடகை வாங்காமலே
பிரசவத்திற்கு
வீடு கொடுபபவர்கள் இவர்கள்
தன் குழந்தையோடு
பிறர் குழந்தையையும்
ஊட்டி வளர்க்கும் உத்தமர்கள்!
உங்கள் உணவுகளை
தட்டிப்பறிப்பது
காக்கையின் சுயநலம் என்பீர்கள்
அது தவறு!

உனக்கும் எனக்கும்
பிள்ளைப் பராயத்திலேயே
விவேகம் கற்பித்தது காக்கைகள்தான்!
மனிதனுக்கு ஆறறிவு!
காக்கைக்கு ஏழறிவு!

எந்தக் காக்கையேனும்
தானிருக்க வீடுகட்டி
உங்கள் வீடுகளை
அசிங்கம் செய்திருக்கிறதா?
காக்கை புணரக் கண்டிருக்கிறீரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணியமானது காக்கை!
மனிதா மிருகங்களில்
உறவு சொல்லி அழைப்பது
மாடு மட்டும்தான்!
பறவைகளில் உறவு சொல்லி அழைப்பது
காக்கை மட்டும்தான்!

என்றாலும் அதன் துரதிஷ்டம்
இங்கே
காக்கைகளை துரத்தி
புறாக்களுக்குத் தீனிபோடும் கைகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணத்துப் பூச்சி

நூலுமில்லாமல் வாலுமில்லாமல்
பறக்கும் பட்டம்!

அழகுக்கு அடிமைப்பட்ட
உல்லாசப் பயணி!
மலர்களில் ஆண்பால்
மலருக்கு மச்சான் முறை!

மென்மையில காற்றுப் பட்டே
கசங்கிப் போகும் கடல் நுரை!

இது பறக்கும் பூவினம்...!
இதன் பெயர் வண்ணத்துப்பூச்சியல்ல
வண்ணத்துப் பூ.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கைக்கோர் கவிதை!

பவுண் விலைபோல்
உன் பெறுமதி பெரிது

குரும்பட்டிக் கோதுபோல்
சுருண்டு
குண்டுமணிபோல் சிவந்த
உன் உதடுகளுக் கிடையிலிருந்து
உதிர்ந்து விழுவது
வார்த்தைகளல்ல வைரக் கற்கள்!

பழுப்பில் போட்ட தங்கம் போல்
உன் நிறத்திற்கும்
பிரகாசம் அதிகம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டியமாடிக் கொண்டே நடக்கும்
உன் நடையும் 24 'கெரட்'!

உன் புன்னகையும்
தங்கத் தண்ணீரில் நனைந்திருக்கிறது!

நீ பர்தாவுக்குள் பதுங்கிக் கொள்!
காற்றும் சூரிய ஒளியும்
உன்னில் உரசி
உன் அழகை பறித்துக்கொள்ளலாம்

அவசரப்பட்டு
வெள்ளிகளின் விண்ணப்பங்களுக்குள்
விழுந்து விடாதே!

உன் பெயர்
இன்னொரு பெயருடன்
இணைத்துப் பேசப்படும் போது
உன் தரம்
20, 18 என்று குறைக்கப்படலாம்!

பவுண் விலைபோல்
உன்பெறுமதி பெரிது!

தங்கமே பொறுத்திரு
உன்னில்
ஒரு மாணிக்கத்தைப் பதிக்கிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து காதல் கவிதைகள்

மொட்டனாட் சிரிப்பும் புதுக் கவிதைப் பார்வையும்

உன் முற்றத்துப் பூங்காவில்
நீ நிற்கையில்
உன் முகப் பூவுக்கு நிகராய்
ஒரு பூவில்லையே
அதுதான்
வண்ணத்துப் பூச்சிகள்
உன் முகத்தில் மொய்த்துத்
தடுமாறிப் போயினவோ

நாள் தோறும்
விதவிதமாய்ப் பூப்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கூந்தல் செடியும்
அற்புதம் பெண்ணே

ஆரோகணம் கவிதை என்றால்
அவரோகணம்
ஓவியம் எனக்கு....

உன்னை
வார்த்தைக்குப் பெயர்த்தால்
அது கவிதையாகிறது
இரேகையில் இழைத்தால்
ஓவியமாகிறது
ஆகவே நான்
இரண்டிற்கும் அடிப்படை நீ என்பேன்

என்னைக் கேட்டால்
இமைப் பறவை சிறகடிக்க
உள்ளிருந்து எழுதியதே
உன் விழி
அது வொன்றுதான்
அது வொன்றுதான்
நான் படித்த
உயிருள்ள கவிதை என்பேன்
என்னைக் கண்டதும்
உன் முகம் வரைந்த
புன்னகை ஒன்றுதான்
உயிருள்ள ஓவிய மென்பேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேராகக் கவிதையினையும்
கிடையாக ஓவியத்தினையும் வைத்து
பிரம்மன்
ஒரு பாயைப் போல்
பின்னியிருக்க வேண்டும்
உன்னை

ஆனால் என் ஆதங்கம்
இக் கவிதையின் அர்த்தம் புரியுமா
உனக்கு என்பது தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மனசுக்குள் இருக்கிறேனா

என் இதயம் திண்மமில்லை
திரவம்
அதனால் தான்
உன் கன்னக் குழியில்
நிறைந்து நிற்கிறது
உதட்டில் கசிந்திருக்கிறது
தாவணியை நனைத்துக் கிடக்கிறது

கடலில் காற்றுரசி
அலை எழும்புமே அது போலத்தான்
உள்ளத்தில் கணந்தோறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
நினைவுரசி அலையடிக்குது

நீரில் நிழலாடுமே அது போலத் தான்
என் மனசில்
உன் முகமாடுது

நான் எச்சில் துப்புவதில்லை
அழுவதில்லை நீ எனக்குள்ளேயே
கலந்திருக்கிறாய் என்பதற்காக
மனதில் கெட்டதை
நினைப்பதுவுமில்லை
செய்வதுவுமில்லை
நீ அதிலேயே
நீச்சலடிக்கிறாய் என்பதற்காக

இப்போதெல்லாம்
நன்றாக உண்டு நல்லதை உடுத்தி
என்னை நான்
அபாரமாய்க் கவனித்துக் கொள்கிறேன்
நானும் நீ என்பதற்காக

பெண்ணே
நாள் தோறும் விரல் நகங்களை
நன்றாகப் பார்த்துக்
கத்தரித்துக் கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும்
என் நெஞ்சுக் குள்ளேயே
நீ இருப்பதால்....

நானும் தான்
கத்தரித்துக் கொள்கிறேன்
நான்
உன் மனசுக்குள் இருக்கிறேனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாமதமாக வந்த விண்ணப்பத்திற்கு

கருங்குயிலின் குரலையும்
கானமயிலின் நடனத்தையும்
பறித்து
உனக்குத் தருகிறேன்

வெண் புறாவின் சாந்தத்தையும்
வெண்ணிலாவின் ஒளியையும்
உன்னில் நனைக்கிறேன்

சூரியனைப் பறித்து
அதன் சூட்டைத் தணித்து
உன் கூந்தலுக்குப் பூவாய்ச் சூட்டுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோனலீசாப் புன்னகையை
உன் முகத்தில் தீட்டுவேன்

நட்சத்திரங்களைக் கோர்த்துப்
பிறையைப் பிடித்து பென்டனாகச் சேர்த்து
உனக்கு மாலையாகச் சூட்டுவேன்

வானவில்லையும்
அந்திச் சிவப்பையும் உரித்து
உனக்கு சேலையாக்குவேன்

மேகத்தில் மெத்தை தைத்து
உன் படுக்கைக்குப்
பஞ்சணையாக்குவேன்

வானிலும் கடலிலும் நீலம் எடுத்து
உன் கண்ணுக்கு
மையாகப் பூசுவேன்

எல்லாம் செய்கிறேன்
தயவு செய்து நீ என்னை
காதலிக்கவில்லை என்று மட்டும் சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியழகி

மூடி கொண்ட உலகின்
வெள்ளை வானில்
கறுப்பு நிலாத் தோன்றுவது
உன் கண்ணழகா

இமாலய குளிரை
விழிகளில் நிறைக்கிறதே
உன் முன்னழகு
மேடு பள்ளம் கொண்டதாலா

கல் விழுந்த தடம்
தொப்புள் என்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அலை
இடுப்பு மடிப்புகளா

காற்றுக்குச் சிதையும்
கடல் நுரைகள் கூட
உன் பாதம் படுகையில்
உடைவதில்லையே ஏன்

உனது வீட்டு முற்றத்து மண்ணில்
எனது பெயரை எழுதிவிட்டு
அழிக்க மனமில்லாமல்
அப்படியே விட்டிருந்தவளே
உனது கைவிரல்கள் என்ன
'பஹ்மன் பனாஹி'யின்
மூங்கில் எழுதுகோலா

உன் உதட்டுப் புத்தகத்தை
விரித்ததும்
உள்ளிருந்து வருகிறதே அந்த
வார்த்தைகளை
எப்படித் தேனில் குழைத்தாய்

நீ மட்டுமென்ன
இத்தனை அழகு
பிரம்மன் எல்லோரையும்
மண்ணால் படைத்துவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுத் தட்டை எடுத்து
அங்குமிங்கும் பூசிவிட்டு
எஞ்சிய அழகால்
உன்னை மட்டும் படைத்தானா

உனது பெயரை
உச்சரிக்கப் பயப்படுகிறேன்
மனதிலிருந்து இறக்கும் போது
கவிதைகள் காயப்படுவதால்....

ஒரு நாளில்
குயிலிடம் கொடுத்துத்தான்
உனது பெயரை
பாடச் சொல்லிக் கேட்க வேண்டும்.

அழகின் ஒட்டு மொத்தம்

அந்திவானும்
உன் முகமும் ஒன்றுதான்
அழகை வரைந்து வரைந்து
அழிப்பதில்....

எனக்குத் தெரியும்
உன் கூந்தல் நெகடிவ்வை
பிரின்ட் செய்த போது தானே
நீர்வீழ்ச்சி வந்தது
உன் விழியை பிரின்ட் செய்த போது தானே
வானமும் நிலவும் வந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மனசுக்கு வெளியே
மலை நாடு
அதில் மேகமூட்டமாய்
உன் தாவணி

நீர்ச் சுழியும்
சிற்றலைகளுமாய்
நீரில் தோன்றும் அதே அழகு
உன் வயிற்றிலும் தானே

பிரம்மனுக்கு
கற்பனை வரட்சி
அது தான்
இயற்கையின் அழகையெல்லாம்
உன்னிலும்
வரைந்து வைத்திருக்கிறான்

இல்லை இல்லை
உலக அழகுகளின்
திருந்திய பதிப்பு நீ

இப்போது இந்த உலகில்
எதுவுமே அழகாய் இல்லை
உன்னைத் தவிர

குயில் தோற்றது
உன் குரலைக் கேட்டதன் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூபாளம் தோற்றது
உன் சிரிப்பைக் கேட்டதன் பின்
பௌர்ணமி தோற்றது
உன் முகத்தைப் பார்த்ததன் பின்
கவிதை தோற்றது
உன்கண்களைப் பார்த்ததன் பின்
ஓவியம் தோற்றது
உன் அழகனைத்தையும்
பார்த்ததன்பின்

பெண்ணே நீ
பர்தாவுக்குள் இருந்து மட்டும்
மீண்டு விடாதே
உன் ஒளியில்
இரவு பகல் தடுமாறிப் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவரி

நவீன ஓவியத்தில் ஈடுபாடும், திறமையும் மிக்க நளீமின் நவீன கவிதைகளும் அழகிய ஓவியங்களாகவே காட்சியளிப்பதன் காரணம், இவரது கவிதைகளில் மேலோங்கி நிற்கும் யதார்த்தமாகத்தான் இருக்க வேண்டும்.

சமாதானக் காலத்தில் பிறந்து சமாதானக் காலத்திலோ அல்லது சண்டைக் காலத்திலோ கவிஞராகி இன்றைய போர்க் காலத்துக் கவிதைகள் பாடும் கவிஞர்களுக்கும், விபரம் தெரிந்த காலம் முதல் போர்க்கிடையிலேயே வளர்ந்து போர்க் காலத்துப் பிரச்சினைகளாலேயே கவிதை வடிக்கும் நளீமுக்கும் நுண்ணிய சில வேறுபாடுகளைக் காண முடிகிறது.

ஓர் ஊர் அல்லது ஒரு சமுதாயம் உள்ளாகியிருக்கும்நிலை, விருப்பு வெறுப்புக்கள், நன்மை தீமைகள், எதிர்பார்ப்புக்கள், கையாலாகாத நிலை, கோபம், விரக்தி போன்ற பலப்பல உணர்வுகளைத் தன்னகத்தே கொண்டு குமுறும் ஒரு கவிஞரின் ஒட்டுமொத்த நிலையாக இக் கவிதைகள் அமைந்திருக்கின்றன.

கவிஞர் அல். அஸூமத்

யாத்ரா வெளியீடு

ISBN : 955-8448-00-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org